செய்தி வெளியீடு எண் : 495 நாள் : 09.03.2023

## செய்தி வெளியீடு

## தமிழ்நாட்டில் பட்டுவளர்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் பட்டுத்தொழிலில் சிறந்து விளங்கும் மூன்று பட்டு விவசாயிகள், மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு ரூ. 6.75 இலட்சம் பரிசுத்தொகை – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (9.3.2023) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில், பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகள், சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக மொத்தம் 6 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகைக்கான காசோலைகளை 9 விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் 2022–2023 ஆம் ஆண்டிற்கான பட்டுவளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், மாநிலத்தில் வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தி திறனை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 25,000/– ரூபாய், 20,000/– ரூபாய் மற்றும் 15,000/– ரூபாய் ரொக்கப்பரிசுகள் வழங்கவும், மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 1,00,000/– ரூபாய், 75,000/– ரூபாய் மற்றும் 50,000/– ரூபாய் ரொக்கப்பரிசுகள் வழங்கவும் 24 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

மேலும், தரமான பட்டு நூல் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 1,00,000/– ரூபாய், 75,000/– ரூபாய் மற்றும் 50,000/– ரூபாய் ரொக்கப்பரிசுகள் வழங்கிட 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில் மாவட்டம் வாரியாக மூன்று சிறந்த பட்டு விவசாயிகளும், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளும், மூன்று சிறந்த தானியங்கி பட்டு நூற்பாளர்களும், மூன்று சிறந்த பலமுனை பட்டு நூற்பாளர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த பட்டு விவசாயிக்கான முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான பரிசுத்தொகையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ர. ரமேஷ் அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத்தொகையை தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. மு. சமுத்திரம் அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத்தொகையை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ப. சங்கர் அவர்களுக்கும்;

மாநில அளவில் சிறந்த தானியங்கி பட்டு நூற்பாளருக்கான முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான பரிசுத்தொகையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. இரா. பெருமாள் அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத்தொகையை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ச. சேகர் அவர்களுக்கும்,மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத்தொகையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. நா. முரளிகிருஷ்ணன், அவர்களுக்கும்;

மாநில அளவில் சிறந்த பலமுனை பட்டு நூற்பாளருக்கான முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான பரிசுத்தொகையை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.மு.ஜெயவேல் அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத்தொகையை கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வே. மோகன்ராஜ் அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத்தொகையை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. ஜெ. வேதவள்ளி அவர்களுக்கும்;

என மொத்தம் 6 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலைகளை 9 விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

..........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in